Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, APRIL 18, 2024

வியாழக்கிழமை ஏப்ரல் 18, 2024 | ஒளி: 09 கதிர்: 233 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவாதம்

# 3 நாட்களுக்கு ரூ.45 மில். செலவு



### முக்கியமான வினாக்களுக்கு மீண்டும் பதில் கிடைக்காமல், அர்த்தமில்லாத செயற்பாடாக அமைந்துவிடுமோ என்ற கேள்வியும் எழுந்துள்ளது

### உண்மைகள் வெளிவராமை, நீதி நிலைநாட்டப்படாமை காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் இன்னமும் மனச் சஞ்சலத்துக்கு உள்ளாகி காணப்படுகின்றனர்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நான்காவது தடவையாக மீண்டும் பாராளுமன்றத்தில் முன்னெடுக்கப்படவுள்ள மூன்று நாள் விவாத நடவடிக்கைகளுக்காக 45 மில்லியன் ரூபாய் இலங்கை வரி செலுத்துவோரின் பணம் செலவழிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தாக்குதல் தொடர்பான முக்கியமான வினாக்களுக்கு மீண்டும் பதில் கிடைக்காமல், அர்த்தமில்லாத செயற்பாடாக அமைந்துவிடுமோ என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இதற்கு முன்னர் இவ்வாறான மூன்று விவாதங்கள் பாராளுமன்றத்தில் முன்னெடுக்கப்பட்டதுடன், தாக்குதல் சூத்திரதாரி யார் எனும் கேள்விக்கான பதிலைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போயிருந்தது.

இந்த தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட மக்கள் இந்த தாக்குதல் தொடர்பான உண்மைகள் வெளிவராமை காரணமாகவும், நீதி நிலைநாட்டப்படாமை காரணமாகவும் இன்னமும் மனச் சஞ்சலத்துக்கு உள்ளாகிய நிலையில் காணப்படுகின்றனர்.

பாராளுமன்றத்தின் வணிகச் செயற்பாடுகளுக்கான குழு ஏப்ரல் 5ஆம் திகதி ஒன்றுகூடி, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான மூன்று நாள் விவாதமொன்றை முன்னெடுப்பதற்கு உடன்பட்டிருந்தது. இந்த விவாதம், தமிழ், சிங்கள புத்தாண்டு பிறப்பின் பின்னர் முதல் வார அமர்வுகளின் போது முன்னெடுக்கப்படும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தை ஏப்ரல் 24, 25 மற்றும் 26 ஆகிய மூன்று நாட்களுக்கு நடத்துவதற்குப் பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான ஒத்திவைப்பு வேளை விவாதத்தை எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த பிரேரணையின் படி முற்பகல் 10.30 மணி முதல் மாலை 5.30 மணி வரையில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வைத்திருந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இந்த விவாதம் நடைபெறும்.

இந்த விவாதத்தை முன்னெடுப்பதற்காக ரூ.45 மில்லியன் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை விவாதத்தின் போது மொத்தமாக ரூ.45 மில்லியன் செலவாகியிருந்தமை தொடர்பில் அவர் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விவாதங்கள்

கொழும்பு வர்த்தக தலைநகரத்தில் நட்சத்திர ஹோட்டல்கள் மூன்று, தேவாலயங்கள் மூன்று ஆகியவற்றின் மீது, ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகளுடன் தொடர்புடைய குழுவொன்றினால், உயிர்த்த ஞாயிறு தினமான 2019 ஏப்ரல் 21ஆம் திகதியன்று தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.





மரணம் 269 (வெளிநாட்டவர் 45 பேர்)

காயம் 500+



| கடந்த விவாத நாட்கள் | நேரம் |
|---|---|
| 2019 மே. 7-8-10 | 18:00 hrs |
| 2021 மார்ச், 10 | 05:00 hrs |
| 2021 மார்ச், 25-26 | 08:00 hrs |
| 2023 ஏப்ரல், 7-8-9 | 06:00 hrs |
| 2023 செப்டெம்பர் 21-22 | 14:00 hrs |



2019 ஏப்ரல் 23

சபாநாயகர் கரு ஜயசூரிய விசேட அறிக்கையை விடுத்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விசேட அறிக்கையை விடுத்தார்.

**2023 ஜனவரி 12,** முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, தேசிய புலனாய்வு முன்னாள் பிரதானி சிசிர மெண்டிஸ், அரச புலனாய்வு முன்னாள் பிரதானி நிலந்த ஜயவர்தன ஆகியோர் மனுதாரரின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாக உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆகையால், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குமாறு உத்தரவிட்டது.



**2021 ஏப்ரல்–21 மே 19, நவம்பர் 11,**

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர விசேட அறிக்கைகளை விடுத்தார்.



**2023 செப்டெம்பர் 21,**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சுமார் 20க்கும் மேற்பட்ட வாய்மூல கேள்விகள் கேட்கப்பட்டதன் பின்னர், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, விசேட அறிக்கையை விடுத்தார்.

**நட்டஈடு தொகை: உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் பாதித்தோருக்கு**



| மைத்திரிபால சிறிசேன (முன்னாள் ஜனாதிபதி) | ஹேமசிறி பெர்னாண்டோ (பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர்) | பூஜித் ஜயசுந்தர (முன்னாள் பொலிஸ் மா அதிபர்) | சிசிர மெண்டிஸ் (தேசிய புலனாய்வு முன்னாள் பிரதானி) | நிலந்த ஜயவர்தன(அரச புலனாய்வு முன்னாள் பிரதானி) |
|---|---|---|---|---|
| 100 மில்லியன் | 75 மில்லியன் | 10 மில்லியன் | 50 மில்லியன் | 75 மில்லியன் |

சுரேஷ் பெர்னாண்டோ © TM GraphicDesk

## O/L அனுமதி அட்டை வருகிறது




2023ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை மே 6ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், தொடர்ச்சி P2

## “21/4 குற்றவாளிகளுக்கு தண்டனை கொடுப்போம்”

### தேசிய மக்கள் சக்தி அறிவிப்பு



ஈஸ்டர் குண்டுவெடிப்பு என்பது நாடுகளுக்கு இடையே ஒற்றுமையின்மையை உருவாக்கி, இனக் கலவரங்களை ஏற்படுத்தி, மக்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் பெரும் சேதம் விளைவித்து, தொடர்ச்சி P2

## பாலிதவின் இறுதி ஆசை



முன்னாள் பிரதி அமைச்சர் பாலித தெவரப்பெருமவின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் சனிக்கிழமை (20) இடம்பெறவுள்ளதாக குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர் தனது வீட்டில் இரண்டு மின் கம்பிகளை செவ்வாய்க்கிழமை (16) இணைக்க முற்பட்ட போது மின்சாரம் தாக்கி நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். தொடர்ச்சி P2



## இரவு டேஸ்ட் கடைகளில் புற்றுநோய் சுவையூட்டிகள்

■ நூருல் ஹுதா உமர்

சாய்ந்தமருது பிரதேச உணவகங்களில் திடீர் சோதனை நடவடிக்கையை சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம்.அர்ஷாத் காரியப்பரின் தலைமையிலான சுகாதார குழுவினர் கடந்த சில தினங்களாக முன்னெடுத்து வருகின்றனர். தொடர்ச்சி P2


மலைநாட்டு எழுச்சி பத்தாண்டு திட்டத்தில்

## 12 மாவட்டங்களில் 10,765 திட்டங்கள்



பல்நோக்கு கிராமிய மற்றும் சமூக அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இவ்வருடத்தின் முதல் காலாண்டு இறுதிக்குள் 10,765 திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2

## ரூ.1900க்கு கொத்து ரொட்டி: முதலாளிக்கு சரீர பிணை



கொழும்பு, வாழைத்தோட்டம் புதுக்கடை பிரதேசத்தில் உள்ள வீதி உணவுப் பகுதியில் உணவு வாங்கச் சென்றிருந்த வெளிநாட்டவரை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பில் செவ்வாய்க்கிழமை (16) கைது செய்யப்பட்ட உணவக உரிமையாளரைப் பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் புதன்கிழமை (17) உத்தரவிட்டது. தொடர்ச்சி P2

## “அரசியல் கைதிகளை விடுவிக்கவும்”

### ஆனந்தவர்ணனை சந்தித்த பின்னர் கஜேந்திரன் கோரிக்கை



■ நிதர்ஷன் வினோத்

கொடிய பயங்கரவாதத் தடைச்சட்ட முழுமையாக நீக்கப்படல் வேண்டுமென வலியுறுத்தியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், அச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய அரசியல் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்படல் வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார். தொடர்ச்சி P2

## “50% க்கு மேல் ஆதரவிருந்தால் நிறுத்துக”




வடக்கு- கிழக்கிலும், வெளியிலும், தமிழ் பேசுகின்ற மக்களின் விருப்புக்களைப் பெறுகின்ற ஆளுமையுள்ள, வடக்கு கிழக்கில் 50 சத வீதத்துக்கும் மேல் வாக்குகளைப் பெறக்கூடிய ஒருவரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2

குழந்தைகளிடையே வயிற்றுப்போக்கு:

## “விழிப்பாக இருக்கவும்”



குழந்தைகளிடையே வயிற்றுப்போக்கு நோய் குறிப்பிடத்தக்க அளவில் பரவுகின்ற நிலையில், எச்சரிக்கையுடன் செயல்படுமாறு லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் குழந்தை நல மருத்துவ வைத்தியர் தீபால் பெரேரா வலியுறுத்தியுள்ளார்.

நீட்டிக்கப்பட்ட விடுமுறை நாட்களைத் தொடர்ந்து குழந்தைகளிடையே வயிற்றுப்போக்கு அதிகம் பரவி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

அடிக்கடி தண்ணீருடன் மலம் வெளியேறுதல், வயிற்று வலி அல்லது பிடிப்புகள், பசியின்மை, குமட்டல் மற்றும் வாந்தி ஆகியவை இந்த நோய்க்கான அறிகுறிகளாகக் காணப்படுகின்றன.

குறித்த அறிகுறிகள் காணப்பட்டால், பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை உடனடியாக மருத்துவச் சிகிச்சைக்கு அழைத்துச் செல்லுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளனர். மேலும், பெற்றோர்கள் குழந்தைகளுக்கு உணவளிக்கும் போது அதிக விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

இதற்கிடையில், குழந்தைகள் மத்தியில் டைபாய்டு காய்ச்சல் (Typhoid fever) பரவுவது குறித்து குழந்தை மருத்துவர் எச்சரித்துள்ளார். தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “21/4 குற்றவாளிகளுக்கு தண்டனை கொடுப்போம்”



குறுகிய அரசியல் நோக்கத்தை அடைவதற்காக நடத்தப்பட்ட சதியே ஆகும் 2019 ஏப்ரல் 21, அன்று ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதலில் சூத்திரதாரிகளுக்கும் குற்றவாளிகளுக்கும் எமது ஆட்சியில் தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது,

இது தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பில்,

2019ஏப்ரல் 21, அன்று (ஈஸ்டர் ஞாயிறு) நடந்த பயங்கரவாத தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க தேசிய மக்கள் சக்தியின் உறுதிமொழி.

ஈஸ்டர் ஞாயிறு அன்று கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ யாத்ரீகர்களைக் குறிவைத்து தீவிரவாதிகள் குழு நடத்திய கொடூரமான தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடந்து இன்றுடன் ஐந்து ஆண்டுகள் ஆகின்றன. அந்த மோசமான நாளில், மூன்று தேவாலயங்கள் மற்றும் பல சுற்றுலா ஹோட்டல்கள் மீதான மனிதாபிமானமற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கிறிஸ்தவ/கத்தோலிக்க யாத்ரீகர்கள் உட்பட இருநூற்று எழுபத்து மூன்று (273) பேர் உயிரிழந்தனர் மற்றும் ஐநூறுக்கும் மேற்பட்டோர் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஊனமுற்றுள்ளனர்.

உயிரிழந்த உயிர்கள், தாக்குதலில் ஆதரவற்ற குடும்பத்தினர் மற்றும் தாக்குதலால் அழிந்த உடைமைகளுக்கு அரசாங்கமே பொறுப்பு என்பதைத் தேசிய மக்கள் சக்தி மக்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறது. அந்த பொறுப்பு இதுவரை சரியாக நிறைவேற்றப்பட்டுள்ளதா என்ற கேள்விக்கு, தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் அந்த விடயங்கள் தொடர்பான சட்டத்தை முறையாக அமுல்படுத்தி, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தாக்குதலை மேற்கொண்டோர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமென வலியுறுத்தியுள்ளோம்.

1. ஈஸ்டர் குண்டுவெடிப்பு என்பது நாடுகளுக்கிடையே முரண்பாட்டை உருவாக்கி, இனவெறிக் கலவரங்களைத் தூண்டி, பெரும் உயிரிழப்புகளையும், சொத்துக்களையும் ஏற்படுத்துவதன் மூலம் குறுகிய அரசியல் நோக்கத்தை அடையச் செய்து, குற்றத்தின் மூளையாகச் செயல்பட்டவர்களையும், திட்டமிடுபவர்களையும் நீதியின் முன் நிறுத்துவோம்.

2. ஈஸ்டர் தாக்குதலைத் தடுக்கத் தவறியவர்கள், தாக்குதலை நடத்துவதற்கு முன், அது குறித்த சரியான தகவல்களைப் பெற்று, தாக்குதல் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளைத் திசைதிருப்பியவர்கள், உண்மையான சதிகாரர்களைப் பாதுகாக்க, உண்மையாகப் பொறுப்பான தரப்பினரை அடையாளம் கண்டு, கைது செய்யப்பட்ட பாதுகாப்புப் படை அதிகாரிகள் மற்றும் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவை மற்றும் அதற்குப் பொறுப்பான ஒவ்வோர் அரசியல் அதிகாரம் உட்பட ஏனைய அதிகாரிகளையும் நீதியின் முன் நிறுத்துவதற்கு, அவர்களுக்கு எதிராகத் தாக்குதல் மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

3. i. மேலும், ஈஸ்டர் பண்டிகையால் பாதிக்கப்பட்டவர்கள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அடிப்படை உரிமை வழக்குகளில் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்ட அரசியல் அதிகாரிகள் மற்றும் அரசு அதிகாரிகளுக்கு,

ii ஏற்கனவே ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள அரசியல் அதிகாரங்கள் மற்றும் அரச அதிகாரிகள், பதவி வேறுபாடின்றி, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

iii எதிர்காலத்தில் ஒரு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் நடத்தப்படும் இந்த கொடூரமான தாக்குதல் தொடர்பாக நியமிக்கப்படும் சிறப்பு விசாரணை ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில், பொறுப்பான அரசியல் அதிகாரிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் மீது குற்றவியல் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்படும்.

4. இத்தாக்குதல் தொடர்பான நிலுவையில் உள்ள வழக்குகளை முன்னுரிமை அடிப்படையில் விரைவில் விசாரித்து முடிக்கவும், அதற்குத் தேவையான வசதிகளை வழங்கவும் சம்பந்தப்பட்ட துறைகளைக் கேட்டுக் கொள்வது.

5. இத்தாக்குதல் தொடர்பாக நாட்டிலிருந்து தப்பிச் சென்ற குற்றவாளிகள் அனைவரையும் அழைத்து வந்து அவர்கள் மூலம் இந்தத் தாக்குதலுக்குத் திட்டமிட்டவர்கள் மற்றும் சதிகாரர்கள் யார் என்று விசாரணை நடத்தி, அவ்வாறு கண்டுபிடிக்கப்படும் திட்டமிட்டவர்கள் மற்றும் சதிகாரர்கள் யாராக இருந்தாலும் அவர்களைத் தண்டிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும்.

6. இத்தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு, உயிருக்கும் உடமைக்கும் உரிய இழப்பீட்டு முறையை அறிமுகப்படுத்துவது, அவர்கள் சந்தித்த மனக் குழப்பத்திலிருந்து அவர்களை விடுவிக்கக்கூடிய உளவியல் திட்டத்தை அறிமுகப்படுத்துவது,

7. இது தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள சிறப்பு ஆணைக்குழுக்கள் மற்றும் ஏனைய விசாரணைகளின் மூலம் வெளிப்படுத்திய தகவல்களின் அடிப்படையில் மேலும் பல விடயங்கள் ஆராயப்பட வேண்டியுள்ளதால், இவ்விடயத்தை மேலும் ஆராய்ந்து பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதி வழங்க முழு அதிகார வரம்பைக் கொண்ட விசேட புலனாய்வுக் குழுவொன்று அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் மிகக் குறுகிய காலத்திற்குள் இந்தத் தாக்குதல்களை நடத்தச் சதி செய்தவர்கள் மற்றும் அதற்குக் காரணமான தரப்பினருக்கு எதிராக பல்வேறு வழிகளில் நீதித்துறை நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதற்கான தண்டனைகள் வழங்கப்படும் என்று இலங்கை மக்கள், எந்த தயக்கமும் இன்றி தேசிய மக்கள் படையின் அரசாங்கத்தால் நாங்கள் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம் என்றது.

# O/L அனுமதி அட்டை வருகிறது




மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டை விநியோகம் அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படும் என்று பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, பாடசாலை விண்ணப்பதாரிகள் அதிபரின் ஊடாக அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் அனுமதி அட்டைகள் தபாலிடப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பாலிதவின் இறுதி ஆசை



இந்நிலையில், தன்னை நல்லடக்கம் செய்வதற்காக களுத்துறையில் புதைகுழியை பாலித ஏற்கெனவே தயார் செய்திருந்தார். அவர் இறந்த 24 மணி நேரத்திற்குள் அவரது அடக்கம் செய்யப்பட வேண்டும் என்பதும், அவரது உடலை அவரது சொந்த வண்டியில் அடக்கம் செய்ய எடுத்துச் செல்ல வேண்டும் என்பதும் அவரது கடைசி ஆசை என்பதும் குறிப்பிடத்தக்கது.

தன்னுடைய சவப்பெட்டிக்கு கூடுதலாக செலவழிக்க வேண்டாமென ஏற்கெனவே, கேட்டுக்கொண்டிருந்த அவர், அதற்காக செலவிட நினைக்கும் மேலதிக நிதியைக் கொண்டு ஏழ்மையான மாணவர்களுக்குத் தேவையான அப்பியாச கொப்பிகள் உள்ளிட்ட கற்றல் உபகரணங்களைப் பெற்றுக்கொடுக்குமாறும் வீட்டாரிடம் கூறியிருக்கின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் பிரதி அமைச்சருமான பாலித தெவரப்பெரும இறக்கும் போது 64 வயது.

1960ஆம் ஆண்டு பிறந்த பாலித குமார தெவரப்பெரும இலங்கை அரசியலில் பேசப்பட்ட ஒரு புரட்சிகர பாத்திரம். 2002 ஆம் ஆண்டு மத்துகம பிரதேச சபையின் தலைவராக இருந்த பாலித தெவரப்பெரும மேல் மாகாண சபை உறுப்பினராகவும் கடமையாற்றினார்.

2010ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை களுத்துறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினராகவும், உள்நாட்டு அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சராகவும், வனவிலங்கு பிரதி அமைச்சராகவும் பணியாற்றினார்.

# இரவு டேஸ்ட் கடைகளில் புற்றுநோய் சுவையூட்டிகள்

சுகாதாரமற்ற உணவுகள் பொதுமக்களுக்கு விற்கப்படுவதாகக் கிடைக்கப்பெற்ற தகவல்களை அடுத்து, உணவுப் பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவைப் பொதுமக்களுக்கு உறுதிப்படுத்தல் என்ற நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸஹீலா இஸ்ஸதீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் சாய்ந்தமருது பிரதேச இரவு நேர உணவகங்கள், டேஸ்ட் கடைகள், கோழி பதப்படுத்தி விற்கும் இடங்கள் போன்றவற்றில் செவ்வாய்க்கிழமை (16) இரவு திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கடந்த காலங்களில் சாய்ந்தமருது பிரதேச உணவகங்கள், சந்தை, சில்லறைக் கடைகள், மொத்த விற்பனை நிலையங்கள், சிறிய சூப்பர் மார்க்கட்கள் போன்றவற்றைப் பார்வையிட்ட அவர் உரிமையாளர்களுக்கும், உணவு தயாரிப்பவர்களுக்கும் சுகாதார நடைமுறைகளைப் பேணி உணவுகளைத் தயாரிக்குமாறும் உணவகங்கள் சுத்தமில்லாது இருத்தல், உணவு கையாளுகையில் முறையான ஒழுங்கின்மை, நீண்ட நாட்களுக்குப் பொருத்தமில்லாதவாறு உணவுகளைத் தேக்கி வைத்தல், சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் பொருட்களின் தரம் போன்றவற்றைச் சுகாதார முறைப்படி பேணுமாறும் ஆலோசனை வழங்கியதுடன், அறிவித்தல்களைப் பேணி நடக்காத உணவகங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்திருந்தார்.

அதனை ஒட்டியதாக சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம்.ஜெரின் உட்பட காரியாலய உத்தியோகத்தர்கள் சகிதம் சாய்ந்தமருது பிரதேச உணவு தயாரிக்கும், விற்பனை செய்யும் நிலையங்கள் மீது திடீர் பரிசோதனையும், முற்றுகையும் இடம்பெற்று மாலை நேர உணவகங்களில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுகள், கழிவு எண்ணெய்கள் மற்றும் புற்றுநோயை உண்டாக்கும் தன்மை கொண்ட சுவையூட்டிகள், கலப்படம் செய்யப்பட்ட சுவையூட்டிகள் போன்ற பொருட்கள் கைப்பற்றப்பட்டது. மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற, முறையான களஞ்சிய வசதி இல்லாத மற்றும் பழுதடைந்த உணவுகளை வைத்திருந்தோர் மீது எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது. அதே போன்று சில உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கத் தேவையான மேலதிக ஒழுங்குகளை சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் மேற்கொண்டுள்ளது.

# 12 மாவட்டங்களில் 10,765 திட்டங்கள்

இத்திட்டத்திற்காகத் தெரிவு செய்யப்பட்ட 12 மாவட்டங்களில் விடுவிக்கப்பட்டுள்ள தொகை 4109.20 மில்லியன் ரூபாவாகும்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனையின் பிரகாரம் இந்த வருட வரவு- செலவுத் திட்டத்தில் மலைநாட்டு எழுச்சி பத்தாண்டு பத்து வருட பல்நோக்கு கிராமிய மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை 10.000 மில்லியன் ரூபாவாகும். களுத்துறை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, காலி, மாத்தறை, குருநாகல், அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இந்த அபிவிருத்தித் திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

முதல் காலாண்டில் 09 மாவட்டங்களுக்கு இத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், இம்மாதத்தில் இரத்தினபுரி, கேகாலை மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களுக்கும் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

மலைநாட்டு எழுச்சி பத்தாண்டுத் திட்டத்தின் கீழ் கேகாலை மாவட்டத்தில் அதிகளவான திட்டங்கள் செயற்படுத்தப்பட உள்ளன. அந்த திட்டங்களின் எண்ணிக்கை 2,545 ஆகும். கண்டி மாவட்டத்தில் 2,214 வேலைத் திட்டங்களும் மாத்தளை மாவட்டத்தில் 647 வேலைத் திட்டங்களும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. நுவரெலியாவில் 554 திட்டங்களும் காலியில் 505 திட்டங்களும் மாத்தறையில் 1,403 திட்டங்களும் குருநாகலில் 515 திட்டங்களும் இரத்தினபுரியில் 1,813 திட்டங்களும் பதுளை மாவட்டத்தில் 305 திட்டங்களும் உள்ளன. இது தவிர, களுத்துறை, கண்டி, அம்பாறை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் 163 சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மலைநாட்டு எழுச்சி பத்தாண்டு 10 வழி ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தி திட்ட ஒதுக்கீடுகள் வீடமைப்பு, உட்கட்டமைப்பு, சமூக அபிவிருத்தி மற்றும் வாழ்வாதார அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் எனவும், இத்திட்டங்களை ஜூலை 31ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யுமாறும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

# “50% க்கு மேல் ஆதரவிருந்தால் நிறுத்துக”




மட்டக்களப்பு செட்டிபாளையத்தில் உள்ள அவரது இல்லத்தில் செவ்வாய்க்கிழமை (16) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்...

தமிழர் ஒருவரை பொது வேட்பாளரை நிறுத்தக்கூடாது என்று கூறுகின்றவர்கள், ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்கள் ஊடாக என்ன தீர்வைத் தருவார்கள்? அவ்வாறு தரக்கூடியவர்கள் யார்? என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

எதிர் வரும் ஜனாதிபதித் தேர்த்தலில் தமிழ் மக்கள் சரியாகவும் நிதானமாகவும் முடிவெடுக்க வேண்டும் என்பது எதிர்பார்க்கப்படுகின்றது. சிவில் சமூகமும், புத்திஜீவிகளும், இத்தேர்தலை எவ்வாறு கையாளப்படல் வேண்டும் என்பது தொடர்பில் சிந்திக்கின்றார்கள். இந்நிலையில் தமிழ் தேசிகள் கட்சிகள் இத்தேர்தலை எவ்வாறு கையாளப்படல் வேண்டும் என்பதும் எதிர்பார்க்கப்படுகின்றது என்றார்.

# “அரசியல் கைதிகளை விடுவிக்கவும்”

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளி செல்வநாயகம் ஆனந்தவர்ணனை புதன்கிழமை (17) சந்தித்து உரையாடியதன் பின்னர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் போராளி செல்வநாயகம் ஆனந்தவர்ணன் கடந்த 202403.26இல் கொழும்பு பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் விசாரணைக்காக அழைக்கப்பட்டு அன்றைய தினமே கைது செய்யப்பட்டு வெலிக்கடையில் உள்ள கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவரது முகநூலில் கடந்த 2020இல் ஒரு படமும் 2022இல் ஒருபடமும் பகிரப்பட்டதாகவும் அதன் மூலம் புலிகளை மீளுருவாக்கம் செய்யும் முயற்சி என்ற பொய்க் குற்றச்சாட்டினைச் சுமத்தி அவரைத் தடுத்துவைத்துள்ளனர்.

அவர் சுமார் 9 ஆண்டுகள் ஏற்கெனவே கொடிய சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கும் பல பொய் வழக்குகளுக்கும் முகம் கொடுத்து விடுதலையாகி தனது பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்த நிலையில் மீண்டும் கைது செய்யப்பட்டு கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்டுள்ளார்.

அடிப்படை வசதிகள் மிகவும் மோசமாகவுள்ள சுமார் 400 பேர் மாத்திரம் அடைக்கப்படக்கூடிய வெலிக்கடை விளக்கமறியல் சிறையில் 2286 பேர் அடைத்து வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவர் அடைத்து வைக்கப்பட்டுள்ள வெலிக்கடைச் சிறைச்சாலையில் அவரைச் சந்தித்து உரையாடியிருந்தேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் இயக்கச் சீருடையில் உள்ள படத்தை முகநூலில் பகிர்ந்தாகக் குற்றம் சுமத்தி அதன் மூலம் புலிகளை மீளுருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டதாகவும் குற்றம் சுமத்தி தன்னை கைது செய்து அடைத்துள்ளத் தெரிவித்தார்.

மேலும் அடுத்த தடவை எப்போது நீதிமன்றில் முற்படுத்துவார்கள் என்ற திகதிகூடத் தெரியாத நிலையில் தன்னைத் தடுத்து வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். தன்னைக் கைது செய்து அடைத்துள்ளமையினால் தனது பிள்ளைகள் அனாதரவான நிலையில் இருப்பதாகவும் தனது விடுதலைக்கு அழுத்தம் கொடுக்குமாறும் மிகுந்த வேதனையுடன் கோரினார்.

# ரூ.1900க்கு கொத்து ரொட்டி: முதலாளிக்கு சரீர பிணை



இதன்படி சந்தேக நபர் 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையிலும் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அங்குச் சென்றிருந்த வெளிநாட்டவர் கொத்து ரொட்டி ஒன்றின் விலையைக் கேட்டபோது, கடைக்காரர் 1,900 ரூபாய் என்று கூறியுள்ளார். விலையைக் கேட்டதன் பின்னர் அதை வாங்க வெளிநாட்டவர் மறுத்துவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பான காணொளி, சமூகவலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது. காணொளியின் அடிப்படையில் விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார், சந்தேக நபரைக் கைது செய்தனர்

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொழும்பு 12 பகுதியைச் சேர்ந்த 51 வயதுடையவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோதே, நீதிமன்றம் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது.

## “விழிப்பாக இருக்கவும்”

இந்நிலையில், வயிற்றுப்போக்கு நோய் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்புக்கு இரண்டாவது முக்கிய காரணமாக உள்ளது என உலக சுகாதார அமைப்பு (WHO) குறிப்பிட்டுள்ளது.



# இடுகாட்டில் அமர்ந்து போராட்டம்

ஆ.ரமேஸ்

திம்புள்ள-பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டக்கலை ஹரிங்டன் தோட்ட மக்கள், பரம்பரை பரம்பரையாக பராமரித்து வந்திருந்த பொது மயானத்தில் அமைப்பட்டிருந்த கல்லறைகள் உடைக்கப்பட்டு அங்கு 'பெகோ' இயந்திரங்கள் ஊடாக பொது மயான அடையாளத்தை அழித்து வருவதாக கூறி, இடுகாட்டில் குவிந்து கவனயீர்ப்பு போராட்டமொன்றில் புதன்கிழமை (17) ஈடுபட்டனர்.

அதேநேரத்தில், இத்தோட்டத்திற்கென உழைத்து உயிர் விட்ட மக்களின் புதை குழி இடம் அழிக்கப்படுவதற்கு இடம்கொடுக்க முடியாது என்றும் இத் தோட்டத்தில் எஞ்சி வாழ்பவர்களும் இறந்து போனால் இவ்விடத்தில் தான் புதைக்க வேண்டும். ஆகையால், பொது மயானத்திற்கு உரிய மூன்று ஏக்கர் நிலத்தை ஆக்கிரமிக்க வேண்டாம். இத் தோட்டத்தின் ஏனைய நிலங்களைப் பிரித்து விற்பனை செய்வதற்குத் தாம் எதிர்ப்பு காட்டவில்லை



அதேநேரத்தில், எமக்கான மயான பூமி இடத்தை விட்டுக் கொடுக்க தாம் தயாரில்லை எனவும் மக்கள் உறுதியாகத் தெரிவித்துள்ளனர்.

எனவே, இந்த விடயம் தொடர்பில் தோட்ட உரிமையாளர், அமைச்சர்கள், அரசியல்வாதிகள் எனப் பலரின் கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளதாகத் தெரிவித்துள்ள மக்கள் பொது மயானத்தில் அமர்ந்து தமக்கு உரியத் தீர்வு கிட்டும் வரை போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

அதே சந்தர்ப்பத்தில் பொது மயான ஆக்கிரமிப்பு தொடர்பில் அத் தோட்ட மக்கள் திம்புள-பத்தனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய

# வடக்கில் புதிய வீட்டுத் திட்டம்

எஸ்.தில்லைநாதன்

வடக்கு மாகாணத்தில் வீடற்றவர்களுக்கான சிக்கலை நிவர்த்திக்கும் நோக்கில் ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய புதிய வீட்டுத் திட்டம் முன்னெடுக்கப்பட இருக்கின்றது என ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன், வடக்கில் கிராமிய கலைகளை வளர்ப்பதற்கான புதிய அணுகுமுறைகளை கலாசார உத்தியோகஸ்தர்கள் பின்பற்ற வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

வடக்கு மாகாண புதுவருட கொண்டாட்டம் வவுனியா-நெடுங்கேணி மகா வித்தியாலயத்தில் செவ்வாய்க்கிழமை (16) நடைபெற்றுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது,

"இந்த வருடத்தில் வெற்றி அளிக்கக்கூடிய பயிர் செய்கையை வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ள முடியும். இதற்கு போதுமான அளவு நீர் காணப்படுகின்றது. பெரிய குளங்கள் மற்றும் சிறு குளங்களின் நீர்மட்டம் போதுமானதாக காணப்படுகின்றமையால் இடைபோகம் மற்றும் சிறுபோகம் ஆகியவற்றில் போதுமான அளவு விளைச்சலை எதிர்பார்க்க முடியும். ஆகவே, இதன் ஊடாக நாங்கள் எங்களுடைய வறுமையிலிருந்து மீள்வதற்கான ஒரு சந்தர்ப்பமும் காணப்படுகிறது.

இந்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டத்திலும் குளங்களைப் புனரமைப்பதற்கான நிதி ஒதுக்கீடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதேபோல, வடக்கு மாகாணத்தில் காணப்படக்கூடிய 17 பாரிய குளங்களைப் புனரமைப்பு செய்வதற்கான நிதியை மத்திய அரசாங்கத்திடமும் ஏனைய நிதி நிறுவனங்களிடமும் நாங்கள் கோரியுள்ளோம்.

வடக்கு மாகாணத்தில் வீடற்றவர்களுக்கான சிக்கலை நிவர்த்திக்கும் நோக்கில் ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய புதிய வீட்டுத்திட்டம்



முன்னெடுக்கப்பட இருக்கின்றது. அதற்கமைய 32,000 பயனாளிகள் தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ளனர். குறித்த வீட்டுத்திட்டம் வெகு விரைவில் ஆரம்பிக்கப்பட்டுக் காணி உறுதிப் பத்திரத்துடன் பயனாளர்களிடம் எதிர்வரும் ஒரு வருடத்திற்குள் கையளிக்கப்பட உள்ளன.

இதேவேளை, மக்களிடையே கலை, கலாசாரங்களை வளர்ப்பதற்கு அவர்கள் வாழும் கிராமங்களிலேயே திறந்தவெளி மேடைகளை அமைத்து, அங்கு வாழக்கூடிய இளைஞர் யுவதிகளுக்கு சந்தர்ப்பங்களைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். இந்த விடயம் தொடர்பில் கலாசார உத்தியோகஸ்தர்கள் புதிய அணுகுமுறைகளைப் பின்பற்ற வேண்டும். கிராமங்களில் திறந்தவெளி மேடைகளை அமைத்து நிகழ்ச்சிகளை அரங்கேற்றுவதன் ஊடாக தங்களுடைய தனித்துவமான கலை, கலாசாரங்களை பேணிப் பாதுகாக்க வேண்டும் என்பதே எமது அவா.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவது தொடர்பான தயார்ப்படுத்தல்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன இது தொடர்பான இறுதி தீர்மானங்கள் வெகு விரைவில் எடுக்கப்பட உள்ளன." எனவும் கூறியுள்ளார்.

# நடிகைக்கும் கணவனுக்கும் விளக்கமறியல் நீடிப்பு

கொரியாவில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி சுமார் 30 இலட்சம் ரூபாவை மோசடி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நடிகை தமிதா அபேரத்ன மற்றும் அவரது கணவரான நெல்லி ஜோன்சன் ஆகியோரை எதிர்வரும் 24ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் மஞ்சுள ரத்நாயக்க புதன்கிழமை (17) உத்தரவிட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வு பிரிவினர் நீதிமன்றத்தில் முன்வைத்த விடயங்களை ஆராய்ந்த நீதவான், இவர்களின் விளக்கமறியலை நீடித்து உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபர்கள் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதாகக் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

# "சமூக ஒற்றுமையை சீரழிக்க சில சக்திகள் முயற்சிக்கிறது"

எஸ்.அஷ்ரப்கான்



முஸ்லிம் சமூகத்தினரை மீண்டும் பிளவுபடுத்தும் ஒப்பந்தச் சிந்தனையாளர்களின் முயற்சிகளை மார்க்க, அரசியல் மற்றும் சிவில் தலைவர்கள் ஒன்றிணைந்து முறியடிக்க வேண்டும் என கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ.கலீலுர் ரஹ்மான் புதன்கிழமை (17) தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக கொழும்பு பெரிய பள்ளிவாசலை முன்னிறுத்தி பிறை பார்க்கும் பணியை எமது முன்னோர்கள் கடைப்பிடித்து வருகின்றனர். அதில் இஸ்லாமிய மாத சுட்டெண்ணையும் மாதாந்தம் அவர்கள் கணித்து வருகிறார்கள். கொழும்பு பெரிய பள்ளிவாசலின் பிறை குழுவில் தற்போது அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை மற்றும் அரசாங்கத்தின் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அதன் வெளிப்படைத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உறுதியான மற்றும் நம்பகமான தீர்மானங்களை எடுப்பதில் உள்ள சில காலதாமதங்களை முன்வைத்து சில ஒப்பந்த சிந்தனையாளர்கள் முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமையைச் சிதைத்து பிராந்திய மற்றும் பூகோள அரசியல் சதிகளைச் செய்ய முயற்சிக்கிறார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. சில நாட்களாக சமூக ஊடகங்களில் கிழக்கு மாகாணத்தில் தனியாகப் பிறை பார்க்கும் குழு அமைக்கப்பட வேண்டும் என்று சிலர் பகிரங்கமாகவே கருத்துத் தெரிவித்து வருவதை பார்க்கும் போது சந்தேகம் வலுப்பெறுகிறது.

கொழும்பு பெரிய பள்ளிவாசலில் கூடியிருந்த தேசிய பிறைக் குழு தனது அறிவிப்பை உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கும் முன் சிலர் தமது சொந்த சமூக வலைத்தளங்களிலும் மற்றும் முக்கியஸ்தர்கள் பலர் ஊடகங்களிலும் விமர்சித்திருந்தனர். சில சமூகவலைத்தள செயற்பாட்டாளர்கள் முந்திக்கொண்டு பிறை தொடர்பில் பிழையான தீர்மானத்தை சமூக ஊடகங்கள் ஊடாக பரப்பி முஸ்லிம் சமூகத்தினரிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தி, கொழும்பில் உள்ள பெரிய பள்ளிவாசல் மீதான பிறைக் குழுவை குற்றம் சாட்டி, முஸ்லிம் சமூகம் மத்தியில் கொழும்பு பெரிய பள்ளிவாசலுக்கும் பிறைக் குழுவுக்கும் எதிரான கருத்தியலை உருவாக்கி வந்தனர். இதனூடாக முஸ்லிம் சமூகத்தினரிடம் பிளவுபடுத்தும் கருத்தியல் மனப்பான்மையை உருவாக்கி முஸ்லிம் சமூகத்திடம் பாகுபாட்டை உருவாக்குவதே அவர்களின் அடிப்படை நோக்கமாகும்.

கிழக்கிலும், தெற்கிலும், வடக்கிலும், மேற்கிலும் உள்ள முஸ்லிம்கள் அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் ஒரு சக்தியாக ஒன்றிணைய வேண்டிய இந்த நேரத்தில் அரசியல் கட்சிகள் மற்றும் மதக் கருத்தியல் பிரிவுகள் மூலம் முஸ்லிம் சமூகத்தை பிளவுபடுத்தி, இந்த ஒப்பந்த பிரிவினைவாத சித்தாந்தங்கள் மற்றும் முஸ்லிங்கள் ஒருபோதும் சோரம்போக கூடாது. மட்டுமின்றி இந்த விடயங்களில் மார்க்க, அரசியல் மற்றும் சிவில் தலைவர்கள் ஒன்றிணைந்து ஒரே சமூக கட்டமைப்பாக செயல்பட வேண்டும்" என குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸார் தாக்கியதாக கூறி

# குடும்பஸ்தர் வைத்தியசாலை அனுமதி

வெளிநாட்டில் இருந்து வருகைதந்துள்ள நபர் ஒருவருடன் சேர்ந்து புளியங்குளம் பொலிஸார் தன்னை தாக்கியதாக தெரிவித்து வவுனியா வைத்தியசாலையில் குடும்பஸ்தர் ஒருவர் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் செவ்வாய்க்கிழமை (16) இடம்பெற்றுள்ளது.

வவுனியா-சின்னப்பூவரசங்குளத்தை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்ட நபர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது,

"விசாரணை ஒன்று இருப்பதாக புளியங்குளம் பொலிஸார் என்னை செவ்வாய்க்கிழமை (16) அழைத்தனர். நான் அங்குச் சென்றநிலையில், எனது தொலைபேசி மற்றும் கைப் பை என்பன பறிக்கப்பட்டு



இரு கைகளிலும் விலங்கு போடப்பட்டது.

பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி உட்பட ஏனைய பொலிஸாரும் என்னைப் பிடித்து வைத்திருக்க, வெளிநாட்டில் இருந்து வருகைதந்திருந்த நபர் ஒருவர் பொலிஸ் நிலையத்திற்குள் வைத்து என்னைத் தாக்கினர்.

பின்னர் என்னை இழுத்துச் சென்ற அவர்கள் அந்த நபரின் வாகனத்தில் ஏற்ற முற்பட்டனர். இதன்போது நான் பொதுமக்களின் உதவியினை நாடி பிரதான வீதியை மறித்திருந்தேன்.

பின்னர் மீண்டும் என்னை பொலிஸ் நிலையத்திற்குள் இழுத்துச் சென்றனர். அங்கு பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி அவரது சப்பாத்து கால்களால் எனது நெஞ்சில் தாக்கினார்.

பின்னர் அங்கு வந்த பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் என்னிடம் வாக்குமூலம் பெற்றுவிட்டு பொலிஸ் நிலையத்தில் இருந்து என்னையும் எனது மனைவி பிள்ளைகளையும் வீட்டிற்கு அனுப்பியிருந்தார்.

பொலிஸார் தாக்கியதால் எனது உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டேன்" என்றார்.

இதேவேளை, குறித்த விடயம் தொடர்பாகத் தாக்கப்பட்டவரின் மனைவி வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்துள்ளதுடன் வைத்தியசாலை பொலிஸாரிடமும் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

# தேர்தல் ஆணையாளர் விடுதியில் கைவரிசை

செ.திவாகரன், டி.சந்ரு

நுவரெலியா மாவட்ட தேர்தல் ஆணைக்குழுவின் ஆணையாளரின் விடுதியில் தங்க நகை, பணம், இலத்திரனியல் சாதனங்கள் என பல பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நுவரெலியா- உடபுஸ்ஸலாவை பிரதான வீதியில் நுவரெலியா இலங்கை அரச போக்குவரத்து சபை அருகில் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தனியார் விடுதியொன்றிலேயே குறித்த திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த தனியார் விடுதியில் வசிப்பவர்கள் புத்தாண்டை முன்னிட்டு அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட விடுமுறையை கழிப்பதற்கு தனது சொந்த ஊருக்கு சென்றிருந்தவேளை, குறித்த விடுதியை உடைத்து உள்நுழைந்த திருடர்கள், அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த தங்க நகைகள், பணம் மற்றும் மடிக்கணினி, தொலைக்காட்சிப்



பெட்டி உள்ளிட்ட பல இலத்திரனியல் சாதனங்களை திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சொந்த ஊருக்கு சென்று மீண்டும் புதன்கிழமை (17) திரும்பிய போதே விடுதி உடைக்கப்பட்ட சம்பவம் தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக நுவரெலியா தடயவியல் பொலிஸார் மோப்ப நாய்யின் உதவியுடன் நுவரெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஹெரோயினுடன் ஒருவர் கைது



கஜுவத்த பிரதேசத்தில் 5,200 மில்லி கிராம் ஹெரோயின் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் செவ்வாய்க்கிழமை (16) கைது செய்யப்பட்டுள்ளார்.

கொனகங் ஆர பொலிஸாரால் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போதே குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கஜுவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட ஹெரோயினுடன், சந்தேக நபரை வெல்லவாய நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கிழக்கு கடலில் 09 பேர் கைது

திருகோணமலை - ஆனையிறவு கடற்பகுதியில் தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 09 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 02 படகுகளும் மீட்கப்பட்டுள்ளன.

இலங்கை கடற்படையினரால் ஏப்ரல் 15ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 22 மற்றும் 54 வயதுடைய கிண்ணியா பிரதேசத்தில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மீன்பிடி பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், கைப்பற்றப்பட்ட 02 டிங்கிகள் மற்றும் தடைசெய்யப்பட்ட மீன்பிடி சாதனங்கள் சட்டப்பூர்வமாக்கப்படும் வரை கடற்படையின் பாதுகாப்பில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.



# குடும்பத்தினரால் கெஹலியவுக்கு சிக்கல்

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல விளக்கமறியலில் வைக்கப்பட்டு சுமார் மூன்று மாதங்களாகும் நிலையில், அவர் அமைச்சராக இருந்தபோது வழங்கப்பட்ட இரண்டு உத்தியோகபூர்வ வாகனங்கள் தொடர்ச்சியாக அவரது குடும்ப உறுப்பினர்களால் பயன்படுத்தப்படுவதாக சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன், விஜேராம மாவத்தையில் அவருக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லம் ஏன் இதுவரை கையகப்படுத்தப்படவில்லை எனவும் அந்த அதிகாரி கேள்வி எழுப்பியுள்ளார்.

அரச உத்தியோகத்தர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டால், அவர் பெற்றிருந்த அனைத்துச் சலுகைகளும் உடனடியாக இரத்துச் செய்யப்படும், ஆனால், கெஹலிய ரம்புக்வெலவுக்கு ஏன் விசேட கவனம் செலுத்தப்படுகிறது என அந்த அதிகாரி கேள்வி எழுப்பியுள்ளார்.



விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கெஹலிய ரம்புக்வெல்லவின் குடும்ப உறுப்பினர்கள் அதே உத்தியோகபூர்வ வாகனங்களில் வெலிக்கடை சிறைச்சாலைக்கு வருவதாகவும் அந்த அதிகாரி குற்றம் சாட்டியுள்ளார்.

# 'தமிழ்மாமணி' விருது வழங்கி வைப்பு

தில்லி தமிழ் சங்கத்தின் பொதுச்செயலாளர் முனைவர் இரா.முகுந்தனுக்கு அவரது தமிழ் பணியைப் பாராட்டி 'தமிழ்மாமணி' விருது, திருக்கைலாய பரம்பரை செங்கோல் ஆதினம் 103ஆவது குருமகா சன்னிதானங்கள் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிராகச தேசிய ஞான பராமாச்சாரிய சுவாமிகளால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. 'மனம் மன்றம் சேலம்' வெள்ளிக்கிழமை (12) நடத்திய 49ஆம் ஆண்டுவிழாவின் போதே இவ்விருது வழங்கி வைக்கப்பட்டுள்ளது. மூன்று நாட்கள் இடம்பெற்ற இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மனம் மன்றத்தின் தலைவர் டாக்டர் P.S.பன்னீர்செல்வம், சட்டத்தரணி, பட்டிமன்றம் நடுவர் மற்றும் மனம் மன்றத்தின் செயலாளருமான S.D.கலையமுதன் ஆகியோர் சிறப்பாகச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# வெளிநாட்டு சுற்றுலாத்துறையினரும் சுருட்டும் பிரிவினரும்

சமூக ஊடகங்களில் அவ்வப்போது வெளிவரும் வீடியோக்களை பார்க்குமிடத்து, இது எந்தநாட்டில் என்று ஒருசில வினாடிகள் சிந்திக்க வைத்து விடுகின்றது. அந்தளவுக்கு சில வீடியோக்கள் வைரலாகவே இருக்கும். எனினும், மிக நுணுக்கமாக அவதானித்தோமெனில், அது நமது நாட்டில் எங்காவது ஒரு மூலையில் எடுக்கப்பட்டதாகவே இருக்கும்.

இது நவீன யுகம், யாரும் மிக இலகுவில் தப்பிக்கவே முடியாது. அந்தளவுக்கு தொழில்நுட்ப துறை வளர்ந்துகொண்டே செல்கின்றது. முன்னைய காலங்களைப் போல, யாரையும் இலகுவில் ஏமாற்றமுடியாது. ஏனெனில், ஒவ்வொருவரும் சாட்சிக்காக ஒளிப்பதிவு செய்துகொள்கின்றனர். அதற்காக தங்களுடைய அலைபேசிகளை மிக இலாவகமாகப் பயன்படுத்திக்கொள்கின்றனர்.

அவ்வாறான ஏமாற்று பேர்வழிகளில், வெளிநாடுகளில் இருந்து வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் சிக்கிக்கொள்கின்றனர். கொழும்பு நகரத்தைச் சுற்றிக்காட்டுவதற்காக ஓட்டோவொன்றில் ஏற்றி, புறக்கோட்டையை மட்டுமே ஒரேயொரு வட்டம் அடித்துவிட்டு, அவரிடம் பெருந்தொகையான அமெரிக்க டொலர்களை கறந்த, ஓட்டோ சாரதி கைது செய்யப்பட்டமை பழைய கதையாகும்.

எனினும், ஒரு கொத்து ரொட்டிக்கு 1,900 ரூபாய் விலையைக் கூறிவிட்டு, அதனைக் கொள்வனவு செய்யாத வெளிநாட்டவரை மோசமான வார்த்தைகளால் திட்டித்தீர்த்த, கொழும்பு, வாழைத்தோட்ட புதுக்கடை, வீதி உணவுகளை விற்பனைச் செய்யும் முதலாளி ஒருவர் சிக்கிக்கொண்டுள்ளார். அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது, சந்தேக நபர் 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையிலும் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தால் புதன்கிழமை (17) விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

உள்நாட்டைச் சேர்ந்தவர்கள் புதுக்கடையில் முதலில் சாப்பிட்டுவிட்டு அதற்கான கட்டணத்தைக் கேட்டால், தலை சுற்றியே இருப்பர், ஒருசில முதலாளிமார் இவ்வாறு ஏமாற்றிவிடுவர். ஒரு ஜான் வயிற்றுக்கு உண்போரிடம் இவ்வாறு ஏமாற்றுவது எதற்காக? என்பதுதான் புரியாத புதிராகவே இருக்கின்றது. அதனால்தான் என்னவோ? பெரும்பாலான வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை விலைகளைக் கேட்டுவிட்டே, கொள்வனவு செய்வதற்குச் சிந்திப்பர்.

உலகம் மிகவும் சுருங்கி விட்டது. ஏமாற்று பேர்வழிகள் இருக்கத்தான் செய்கின்றனர். ஏமாற்றுவோரும் இல்லாமல் இல்லை. எனினும், விழிப்பாக இருப்பதன் ஊடாக, தப்பித்துக்கொள்ளமுடியும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். சிலவேளைகளை ஏமாற்றுகின்றனர் என தகவல்கள் கசிந்தவுடன், வெளிநாட்டவரை மாறுவேடத்தில் அனுப்பி, ஏமாற்றும் முதலாளியைக் கைது செய்வதற்கான முயற்சியையும் உரிய தரப்பினர் மேற்கொண்டிருக்கக்கூடும்.

எனினும், சிறு,சிறு பெட்டிக்கடைகளில் உள்நாட்டு உணவை உண்ணும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் சிலர், அந்தப் பொருட்களுக்கான உரிய விலையைச் செலுத்தாது தங்களிடம் இருக்கும் இலங்கை நாணய தாள்களை அப்படியே அள்ளிக்கொடுத்துவிட்டு வீடியோவாக எடுத்து தரவேற்றம் செய்கின்றனர். இவ்வாறான சம்பவங்கள், ஏமாற்றலாமென ஏனையவர்களைத் தூண்டக்கூடும் என்பதைக் கவனத்தில் கொள்க.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள் www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

எந்த நாட்டில் நாம் வாழ்கின்றோமே, அந்த நாட்டுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும். அதற்காகத் தாய் நாட்டை மறக்க வேண்டியதில்லை. மனசாட்சிக்கு விரோதமானதாய், தாய் மண்ணை நிராகரிப்பது நன்றி மறந்த செயலாகும்.

எம்மவர்களில் அநேகர் வெளிநாடு சென்றதும் தாய் மொழியை மறப்பவர்கள் அதிகம். அத்துடன், எமது பாரம்பரிய கலாசாரத்தையும் மறந்தே விடுவது கவலைக்குரியது.

ஆயினும் அநேக பெற்றோர் வெளிநாட்டில் இருந்தும் தாய்மொழிஅறிவை வளர்ப்பதுடன் கலை, கலாசாரப் பண்புகளையும் ஊட்டி விடுகின்றனர்.

எனினும், அடுத்த அடுத்த தலைமுறைகளில் ஒரு சாரார் தொடர்ந்தும் காரசாரமான பாரம்பரியங்கள் மொழிகளைப் பின்பற்றுவார்களா என்பது சந்தேகம்தான்.

எனவே, வெளிநாட்டில் வாழும் பெற்றோர்கள் அடிக்கடி தங்கள் தாய் நாட்டுக்கு வந்து, உறவுகளைச் சந்திப்பதும் ஆன்மிக விழாக்கள், பண்டிகைகளில் கலந்து கொண்டால் மிகவும் நல்லது.

உயர் கல்வியில் சிறந்துவிளங்கும் எம்மவர்கள் இசை, நடனம், விளையாட்டு போன்ற துறைகளில் சிறப்பாக இருந்து, தாய்நாட்டை மேன்மைப்படுத்துகின்றனர்.

இந்நிலை தொடர்ந்தால், வெளிநாடுகளில் வாழும் எமது பிள்ளைகள் உலகுக்கே முன்னுதாரண புருஷர்களாக இருப்பார்கள். பண்டைய பெருமைகளை வளர்த்திடுக!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# அரசியலை மாற்றாத தமிழ் தலைமைகள்

முருகானந்தன் தவம்

இலங்கையில் 2024ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டு என பிரசாரப்படுத்தப்பட்டு வரும் நிலையில், முதலில் ஜனாதிபதித் தேர்தல் என ஒரு தரப்பினரும் இல்லை பாராளுமன்றத் தேர்தலே முதலில் என இன்னொரு தரப்பினரும் தென்னிலங்கை அரசியலில் கயிறிழுப்பில் ஈடுபட்டுக்கொண்டிருக்க, தமிழ்த் தேசிய அரசியலில் 'ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர்' என்ற சாத்தியமற்ற, பிரயோசனமற்ற விடயத்துக்கான காரசாரமான கருத்து மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும்போதெல்லாம் அந்த தேர்தலில் யாரை ஆதரிப்பது? என்பதில் தொடங்கி தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும், ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்பது வரை அதிரடி அறிவிப்புக்கள், காரசார விவாதங்கள், இழுபறிகள் என தேர்தல் திருவிழாக்களை கட்டி இறுதியில் புஷ்வாணமாகப் போவதே தமிழ்த் தேசிய அரசியலில் வழமையான நிகழ்வு. அந்த வகையில்தான் இம்முறையும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராகத் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டுமென்ற 'தேர்தல் குண்டு' வடக்கு, கிழக்கில் வெடிக்க வைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் மாத முதல் வாரத்தில் நடத்தப்படலாமென எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்ற தமது நிலைப்பாட்டை, முதலில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தான் முன் வைத்தார். அதனைத் தொடர்ந்து அவர் பங்காளியாகவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து புதிய கூட்டணி அமைத்துள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தமிழ்த் தேசிய கட்சி, ஜனநாயக போராளிகள் கட்சி ஆகிய கட்சிகள் அதை ஒரு தீர்மானமாக நிறைவேற்றின.

சிங்கள ஜனாதிபதி வேட்பாளருக்கு 50 சதவீத வாக்குகள் கிடைக்கப்பெறாமல் தடுப்பதற்கும் அதன் மூலம் தமிழர்களின் உரிமைகளுக்குப் பேரம் பேசுவதற்கும் தமிழ் பொது வேட்பாளர் அவசியம் என்ற காரணம் இந்தக்கூட்டணியால் முன்னிலைப்படுத்தப்பட்டு அது தொடர்பான கலந்துரையாடல்கள், ஆதரவு திரட்டல்கள் ஆரம்பித்த நிலையில், இந்த தமிழ் பொது வேட்பாளருக்கான ஆதரவுகளும் எதிர்ப்புக்களுமான கருத்துக்களும் சூடு பிடித்துள்ள நிலையில், 'ஒற்றுமை என்றால் கிலோ என்ன விலை' என கேட்கும் தமிழ்த் தேசியக் கட்சிகள் தமது பிறவிக் குணத்தை மீண்டும் காட்டத் தொடங்கியுள்ளன.

> **சிங்கள ஜனாதிபதி வேட்பாளருக்கு 50 சதவீத வாக்குகள் கிடைக்கப் பெறாமல் தடுப்பதற்கும் அதன் மூலம் தமிழர்களின் உரிமைகளுக்குப் பேரம் பேசுவதற்கும் முன்வைக்கப்பட்ட 'தமிழ் பொது வேட்பாளர்' என்ற ஆயுதம் சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களை அச்சுறுத்துவதற்குப் பதிலாகத் தமிழ்த் தேசிய கட்சிகளின் அரசியல் பலவீனத்தை மீண்டும் அம்பலமாக்கி தென்னிலங்கை அரசியலை உற்சாகப்படுத்தியுள்ளது**

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ் ஈழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தமிழ்த் தேசிய கட்சி, ஜனநாயக போராளிகள் கட்சி ஆகிய கட்சிகள் ஒரு தீர்மானமாக நிறைவேற்றிய 'தமிழ் பொது வேட்பாளர்' மூலம் நாம் எதையாவது சாதிக்க முடியுமா எனத் தமிழ் மக்களும் சிந்திக்கத் தொடங்கிய நிலையில், அதற்கு மேலும் பலம் சேர்க்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவரும், வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவ்வாறு ஒரு பொது வேட்பாளராக நிற்பதற்குத் தான் தயார் என்று அறிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் 'தமிழ் பொது வேட்பாளர்' என்ற அறிவிப்பு தென்னிலங்கை அரசியலில் பரபரப்பையும் கொஞ்சம் பதற்றத்தையும் ஏற்படுத்திய நிலையில்தான் 'நீங்கள் அப்படிப் பரபரப்போ பதற்றமோ அடைய வேண்டாம். ஏனெனில், "எம்மிடம் தான் ஒற்றுமை என்பது துளியளவும் இல்லையே" என்றவாறாக தமிழ் பொது வேட்பாளர் என்ற அறிவிப்பை நிராகரித்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தலைவரே இல்லாத இலங்கை தமிழரசுக்கட்சியும் சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களுக்குப் பால் வார்த்துள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் 'தமிழ் பொது வேட்பாளர்' என்ற கரு உருவாகத் தொடங்கியவுடனேயே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் "தமிழ்மக்கள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ஒரேயொரு தெரிவுதான் இருக்கின்றது. அது இந்தத் தேர்தலை பகிஷ்கரிப்பதுதான். அதனையே நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம்" என்று கூறி முதல் ஆப்பு வைத்தார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினால் மட்டும்தானா ஒற்றுமைப் பட முடியாது. எங்களினாலும் ஒற்றுமைப்பட முடியாது என்பதுபோல் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் 'எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரைக் களமிறக்கும் முன்மொழிவை நான் ஆதரிக்கவில்லை. அந்த முன்மொழிவுக்குத் தமிழ் மக்களிடத்தில் பரவலான கருத்தாதரவு கிடையாது. குறித்த முயற்சியானது தமிழ் மக்களுக்கான சாதகமான நிலைமைகளை உருவாக்கும் என்றும் நான் கருதவில்லை'' என்று கூறி அடுத்த ஆப்பை இறக்கியுள்ளார்.

'தமிழ் பொது வேட்பாளர்' தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரின் 3 விதமான அறிவிப்புக்களும் தமிழ்த் தேசிய கட்சிகள் தமிழ் மக்களுக்காக ஒரு போதுமே தமது தலைக்கன, விட்டுக் கொடுப்பின்றிய அரசியல் கொள்கையிலிருந்து மாறப்போவதில்லை என்பதனையே மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளன.

இவ்வாறான நிலையில் 'தமிழ் பொது வேட்பாளர்' என்ற அறிவிப்பு தமிழர் தரப்பில் மரண வாசலுக்கு நிலைக்குச் சென்றுள்ளது,இதனை உயிர்ப்பிக்க, இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாட வருமாறு தமிழ்த் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் கடந்த சில நாட்களுக்கு முன்னர் விடுத்த அழைப்பை 'தமிழ் பொது வேட்பாளர்' என்ற முன்மொழிவை வைத்த, அதனைத் தீர்மானமாக அறிவித்த தமிழ்த் தேசியக் கட்சிகள் உள்ளிட்ட தமிழர் அரசியல் தரப்புக்கள் முற்றாகப் புறக்கணித்தமை மூலம் தமிழ் பொது வேட்பாளரின் மரணத்தை உறுதிப்படுத்தியுள்ளனர்.

சிங்கள ஜனாதிபதி வேட்பாளருக்கு 50 சதவீத வாக்குகள் கிடைக்கப் பெறாமல் தடுப்பதற்கும் அதன் மூலம் தமிழர்களின் உரிமைகளுக்குப் பேரம் பேசுவதற்கும் முன்வைக்கப்பட்ட 'தமிழ் பொது வேட்பாளர்' என்ற ஆயுதம் சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களை அச்சுறுத்துவதற்குப் பதிலாகத் தமிழ்த் தேசிய கட்சிகளின் அரசியல் பலவீனத்தை மீண்டும் அம்பலமாக்கி தென்னிலங்கை அரசியலை உற்சாகப்படுத்தியுள்ளது.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுகளுக்குத் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒற்றுமையின்மையே பெரும் தடையாகவும் பெரும் பலவீனமாகவும் உள்ள அதேவேளை, இதுவே ஆட்சியாளர்களுக்கு பெரும் பலமாக இருப்பதுடன் தமிழர் தரப்பின் கோரிக்கைகளைக் கண்டுகொள்ளாமல் இருப்பதற்கும் காரணமாகவுமுள்ளது. இது தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் நன்கு தெரிந்தாலும் அவர்கள் தமது அரசியலை மாற்ற மாட்டார்கள்.ஏனெனில் அவர்களுக்குத் தமிழ் மக்களை விடவும் வறட்டு கௌரவம்,தலைக்கனம்,விட்டுக் கொடாமை என்பவையே உயிர் மூச்சு.

## கடிதங்கள்

### நிலத்தடி நீர் ஆபத்தில்

க.அகரன்

வவுனியாவில் அதிகமான ஆழ்துளை குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு வருவதால் மாவட்டத்தின் நிலத்தடி நீர் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சூழலியலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக புலம் பெயர்ந்து வசிக்கும் வெளிநாட்டவர்களின் நிதி உதவிகளில் இவ்வாறான அதிகமான கிணறுகள் அடிக்கப்பட்டு வருகின்றது.

இதனால் ஏற்கெனவே பாதிக்கப்பட்டுள்ள நிலத்தடி நீரின் தன்மை மோசமடையும் நிலை ஏற்படும் என சூழலியலாளர்கள் கவலை அடைந்துள்ளனர்.

அண்மையில் புலம்பெயர் நாட்டிலிருந்து வவுனியாவிற்கு வருகைதந்துள்ள நபர் ஒருவர், வெளிநாட்டிலிருந்து அனுப்பப்படும் நிதி உதவியின் கீழ் 100 ஆழ்துளை குழாய்க் கிணறுகளை அமைத்துள்ளார்.

இதனால் ஏற்படும் எதிர்கால அபாயங்கள் தொடர்பாக அறிந்து கொள்ளாமல் இவ்வாறான செயற்பாடுகளுக்கு நிதி உதவிகளை வழங்குவது பொருத்தமானதல்ல என சூழலியலாளர்கள் எச்சரித்துள்ளனர்.

எனவே, இந்த விடயத்தில் பிரதேச செயலகம் மற்றும்

நீர் வள சபை, நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை ஆகியன தலையிட்டு அவற்றை ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கையினை எடுப்பதுடன் நீர் இன்றி தவிக்கும் மக்களுக்கு உரியமுறையில் நீரினை வழங்குவதற்கான பணிகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

– அவர்கள் தெரிவிக்கின்றனர்

# ஏன் இந்த மௌனமடி....?





ஷெல்லிதாசன்

தொப்........

மனோகரிக்கு பாம்புச் செவி. சமையலறைக்குள்ளிருந்து இரவுச் சமையல் செய்துகொண்டிருந்தவள், காதில் அந்தச் சத்தம் கேட்டுவிட்டது. ஊடனடியாக அலேட்டானாள் அவள். “இச்சேருங்கோப்பா...நான் கூப்பிடிறது கேக்கல்லையே” கணவன் சுந்தரேசனை உரத்து அவள் கூப்பிட்டாள் சுந்தரேசன் ரி.விக்கு முன்னால் தொடர் நாடகமொன்றில் புதைந்து போய் கிடந்தான்.

“இந்த மனிசனுக்கு நாடகம் பாத்தால் அதுக்குள்ளையே தொலைஞ்சு போகும்” என்றவளாய் “நான் கூப்பிட்டது கேக்கல்லையே.. வேலிக்கரைத் தென்னை மரத்திலையிருந்து தேங்கா விழுந்ததப்பா. இந்தத் தேங்காய் விலையிலை உங்களுக்கென்ன அக்கறை. மூண்டு நேரமும் சமைச்சுப் கொட்டிற எனக்கல்லோ தெரியும் அதின்ரை அருமை” என்றவள் “இச்சேருங்கோப்பா எழும்பிப் போய் அதை பாத்து எடுத்துக் கொண்டு வாங்கோப்பா” என உரத்துக் கத்த “இந்த மனிசிக்கு நான் நாடகம் பாக்கேக்கை குழப்பாட்டி வேலை ஓடாதே” என புறுபுறுத்தபடி சுந்தரேசன் எழுந்து வெளியே போய் எல்லை வேலிக் கரையில் விழுந்த தேங்காயை ரோச்லைட் அடிச்சுத் தேடினான். தேங்காய் விழுந்துதானிருந்தது. ஆனாலது செல்லாச்சி மாமியின்ரை காணி முற்றத்தில் விழுந்து கிடந்தது. சுந்தரேசன போன நேரத்தில் அவனது மாமி விரைந்து ஓடி வந்து அந்தத் தேங்காயை எடுத்துக்கொண்டு மறைந்ததைக் கண்டான். ஏதும் செய்வதறியாத சுந்தசேன், திரும்பி வந்து “தேங்காய் எங்கடை வீட்டுப் பக்கம் விழேல்லையப்பா செல்லாச்சி மாமியின்ரை வீட்டு முத்தத்திலை விழுந்திருக்க அதை மாமி எடுத்துக்கொாணடு போறா. அவவிட்டை நான் கதைச்சா பிரச்சனையெண்டு பேசாமல் வந்திட்டனப்பா” என மனோகரியிடம் முறையிட்டான்.

வேலி எல்லையில் நிற்கும் அந்த தென்னை மரத்தால் அடிக்கடி மனேகரிக்கும் சுந்தரேசனின் மாமிக்கும் எப்பொழுதும் சண்டைதான். சுந்தரேசன் தனது சொந்த மாமியின் மகளைக் கட்டாமல் மனோகரியை காதலித்து கலியாணம் கட்டியதால் உண்டானது பகை. சுந்தரேசனின் பாட்டனின் பெயரில் ஒரே காணியாக இருந்த காணி பாகப் பிரிவினை செய்யப்படடு சுந்தரேசனின் தகப்பனாருக்கும், அவரது சகோதரியான செல்லாச்சிக்கும் சமமாகப் பிரிக்கப்பட்டது. அப்படிப் பிரிக்கப்பட்டபோது, சுந்தரேசனின் தந்தையின் எல்லை வேலிக்கு இரண்டடி உள்ளே உள்ள தென்னை மரம் அவர்களுக்கு உரித்தானது. மா, பலா என பல மரங்களையுடைய அந்தக் காணியில் ஒரேயொரு தென்னை மரந்தான். அதுவும் தற்போது தந்தையின் ஒரேயொரு வாரிசான சுந்தரேசனுக்கே கிடைத்து விட்டதால் செல்லாச்சி மாமிக்கு பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அந்த மரத்திலிருந்து அடிக்கடி தேங்காய் விழும்போதெல்லாம் அக்கப்போர் நடக்கும். தங்கடை எல்லை வேலிக்கு உள்ளே உள்ள தென்னைமரத் தேங்காய் ஒண்டிரண்டு செல்லாச்சி மாமியின காணிக்குள் விழுந்தால் போதும், ஒரு சண்டை மூளுவதை எதிர்பார்க்கலாம். சுந்தரேசனுக்கோ இது ஒரு பெரிய தலையிடி. அடிக்கடி இப்படி சண்டை மூட்டிவிடும் தென்னை மரத்தை வெட்டும்படி மனோகரி அடிக்கடி நச்சரித்தாலும், அவனுக்கு ஒரு மரத்தை வெட்டி வீழ்த்துவதில் எந்தவித உடன்பாடும் கிடையாது.

மனிதரைப்போல பாகுபாடுகாட்டி பயன்கொடுக்க மரங்களுக்குத் தெரியாததால் பல இடங்களில் மரங்கள் பல தறித்தெறியப்படுவதும் கோடு வழக்கென சிலர் அலைவதும் சகசமான விடயமாகும். இவர்களது எல்லை வேலித் தென்னையும் அப்படியொரு பிரச்சினைக்குரிய மரமாகப்போனது.

தனது வீட்டு மரத்துத் தேங்காய் தனக்கே உரித்து. தற்செயலாய் அது பக்கத்து வீட்டிலை விழுந்தால் அதை உடனடியாக தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமென்பது மனோகரியின் பிடிவாதம். ஆனால், செல்லாச்சி மாமி அதற்கெல்லாம் மசியத் தயாரில்லை. தனது தகப்பனார் நட்டுவளத்த தென்னை தனக்கும் சொந்தந்தானென்பது மாமியின் மாறாத விடாப்பிடி.

வழக்கம்போல அன்று மாலை வெளி முற்றத்திலிருந்து சுந்தரேசனும் மனைவி மனேகரியும் கதைத்துக் கொண்டிருந்தனர். திடீரென ஒரு சத்தம். ஆமாம் எல்லை வேலித் தென்னை மரத்திலிருந்து விழுந்த தேங்காயின் ஒலிதான் அது. சத்தத்தத்தைக் கேட்ட மனோகரி உசாரடைந்தவளாய் அதை கையகப்படுத்த விரைந்தாள். ஆனாலும் அது செல்லாச்சி மாமியின் முற்றத்தில் விழுந்திருந்ததைக் கண்டு சினமுற்றவளாய, “எங்கடை மரத்துத் தேங்காய் அது. அதை உடனடியா எங்கடை வளவுக்கை போடச் சொல்லுங்கோ.. அப்பிடிப் போடாட்டி இண்டைக்கு வீண் பிரச்சனை வருமெண்டு உங்கடை மாமிட்டை சொல்லுங்கோ” என சுந்தரேசனைப் பார்த்து கொந்தளித்தாள் மனோகரி. தேங்காய் விழுந்த சத்தத்தைக் கேட்ட செல்லாச்சிமாமி


> **மனிதரைப்போல பாகுபாடுகாட்டி பயன்கொடுக்க மரங்களுக்குத் தெரியாததால் பல இடங்களில் மரங்கள் பல தறித்தெறியப் படுவதும் கோடு வழக்கென சிலர் அலைவதும் சகசமான விடயமாகும்**

இதையெல்லாம் சட்டை பண்ணாமல் அதனை எடுத்துக்கொாணடு போக அவ்விடத்துக்கு வந்தாள். அதனைக் கண்டதும் “ரோசங்கெட்ட சனங்கள். நாங்கள் எத்தினை தடவை சொல்லியும் உணர்ச்சியே இல்லாத மூதேவியள். ஒரு தேங்காய் வாங்க வக்கில்லாதது போல எங்கட மரத்துத் தேங்காய் எப்ப தங்கடை வளவுக்கை விழுமெண்டு நித்திரை கொள்ளாமல் காத்திருக்குதுகள்” என மனோகரி பெலமாக கத்திக்கொண்டிருக்க அவள் கத்துவதை கேளாததுபோல விழுந்து கிடந்த தேங்காயை எடுத்துக்கொண்டு வீட்டுக்குள் சென்றாள். இதைப் பார்த்ததும் மனோகரிக்கு ரெத்தம் கொதிப்படைந்தது. “பிச்சைக்காற நாயள், பார் நாங்கள் இவ்வளவு பேசியும் சுரணையில்லாமல் எடுத்துக்கொண்டு போகுதுகள். இனி இவளவையிலை இரக்கம் பாக்க ஏலாது. காளி ஆச்சியிட்டை நேத்தி வைச்சு எங்கடை தேங்காயை களவெடுக்கிறவளின்ரை கை முறிய வேணுமெண்டு அவளின்ரை தலையிலை பாரத்தைப் போடப்போறன்” என அவளே காளியாக மாறியவள்போல சுந்தரேசனை முறைச்சுப் பார்த்து “உங்கடை மாமிக்கு எதுவும் சொல்ல உங்களுக்குப் பயமப்பா. என்ரை அண்ணன் மாரெண்டா வேலியாலை பாயஞ்சு போய் உடனேயே தேங்காயை பறிச்செடுத்திட்டு வந்திடுவாங்கள். நீங்கள் பெம்பிளையளுக்கு பயப்படுற ஒரு பொம்மனாட்டி” என கணவனை கேலி செய்தவள் “இப்ப பாருங்கோவன் விளையாட்டை. காளியாச்சியை வைச்சு ஒரு வெருட்டுப் போட்டிருக்கிறன். உங்கடை மாமிக்கு காளியாச்சியெண்டா கெடி கலக்கமெண்டு எனக்குத் தெரியும். இப்ப நடக்கப்போற வேடிக்கையை பாருங்கோவன். இப்பிடியெல்லாம் வெருட்ட உங்களுக்கு மூளை வந்தாத்தானே” என சுந்தரேசனை அவள் கிண்டலடித்த மறுகணம், செல்லாச்சி மாமிக்கு ரோசமோ அல்லது காளியாச்சியிலை ஏற்பட்ட பயமோ தெரியாது, தான் எடுத்துக்கொண்டு போன தேங்காயை தூக்கிவந்து சுந்தரேசனின் வீட்டுக்கு முன்னால் வீசியெறிந்து விட்டு மறைந்து விட்டாள்.

இதைக் கண்டதும் மனோகரி பெருமை பிடிபடாதவளாய் பலமாக சிரித்தபடி “இப்ப என்ன சொல்லிறீங்கள் உங்கடை மனிசியின்ரை கெட்டித்தனத்தைப்பற்றி? வாயிருந்தா வங்காளம் போகலாமப்பா. சும்மா நாங்கள் வாயை மூடிக்கொண்டிருந்தால் சனம் எங்களுக்கு மேலையேறி சவாரி செய்து போடுங்கள். செல்லாச்சிமாமி இனி இந்தச் சென்மத்துக்கு எங்கடை தேங்காயிலை ஆசைப்படமாட்டா. அப்பிடியொரு வெருட்டெல்லே வெருட்டி வைச்சனான். இனி நாங்கள் மரத்தை தறிக்கவும் தேவையில்லை” என வார்த்தை ஜாலம் புரிந்துகொண்டிருக்க சுந்தரேசனும் தான் இவ்வளவு காலமும் செல்லாச்சிமாமிக்கு தன்மையாய் எடுத்துச் சொல்லியும் எடுபடாத சங்கதியை தனது மனைவி சாதித்துவிட்டாளே என பெருமைப்பட்டவனாய் செல்லாச்சிமாமி தங்கள் காணிக்குள் விட்டெறிந்த தேங்காயை ஆவலுடன் கையிrடுத்தவன் அதனை இலாவகமாக குலுக்கிப் பார்த்தான். அப்படி குலுக்கிப் பார்த்தவன் சந்தேகம் வந்தவனாய் மீண்டும் அதனை குலுக்கிப் பார்த்தான் இளனிச் சத்தம் ஏதுமற்றதாய் தேங்காய் இலேசாகவும் இருந்தது. அவனுக்கு உண்மை புரிந்தது விட்டது. கையிலிருந்த தேங்காயை மனோகரியின் முன்னால் தூக்கியெறிந்தான். மனோகரி பெருமை பிடிபடாதவளாய் பெருமிதத்துடன் சிரித்தபடி அதை சாவதானமாக ஆசையோடு தூக்கியெடுத்து அதனை குலுக்கினாள், பலமுறை குலுக்கிப் பார்த்தாள். ஆனால், உள்ளிருந்து இளனியின் ஓசை ஏதும் வராது தேங்காய் மௌனம் காத்ததனை அறிந்த அவளது முகம் பேயறைந்ததுபோல சிவந்துபோனது. அதைக் கவனித்த சுந்தரேசன் மனோகரியைப் பார்த்து நக்கல் சிரிப்புதிர்த்தான்.

செல்லாச்சி மாமியென்ன கொக்கா? மனோகரியின் பேச்சுக்கு, வெருட்டுதலுக்கு அவள் பயப்படுவாளா? கறிக்குதவாத ஒல்லித் தேங்காய் அவளுக்கு எதற்கு? அதுதான் செல்லாச்சி மாமி அதனை விட்டெறிந்தாள்.

மனோகரி தனக்கு ஏற்பட்ட மானக் கேட்டை எண்ணி மனங் கொதித்தவளாய் ஆத்திரத்தோடு தனது கையிலிருத தேங்காயை மீண்டுழ் செல்லாச்சிமாமியின் வீட்டு முற்றத்தை நோக்கி வீசினாள். வீசிய தேங்காய் தனது வீட்டு முற்றத்தில் வந்து தொப்பென விழுந்ததை கண்ட செல்லாச்சி மாமி வீம்புக்கு கைதட்டி பலமாகச் சிரித்தாள்.



கற்றல் கற்பித்தலை புரட்சிகரமாக்கும்

## Generative AI தொழில்நுட்பம்

சமகாலத்தில் பல்வேறு துறைகளிலும் புரட்சியை ஏற்படுத்தி வரும் *Generative Artificial Intelligence* எனப்படும் உருவாக்கும் செயற்கை நுண்ணறிவு அனைவரதும் பேசுபொருளாக மாறிவருகின்றது. இந்தத் தொழில்நுட்பம் தொடர்பான பல அம்சங்கள் உலக அரங்குகளில் குறிப்பாக யுனெஸ்கோ அளவில் விவாதிக்கப்படுகின்றது.

யுனெஸ்கோவானது இது தொடர்பான நீண்ட கால கொள்கைத் திட்டமிடல், மனிதத் திறன் மேம்பாடு போன்ற விடயங்களில் உலக நாடுகளை நெறிப்படுத்தும் உடனடி நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. அதனடிப்படையில் கற்றல் கற்பித்தல் துறையில் *Generative AI* தொழில்நுட்பத்தின் பயன்பாடு தொடர்பான பிரத்தியேகமான வழிகாட்டல்களையும் வெளியிட்டுள்ளது. குறிப்பாகப் பாடத்திட்ட வடிவமைப்பு, கற்றல், கற்பித்தல் மற்றும் ஆய்வு நடவடிக்கைகளில் *GenAI* ஐ ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஊக்குவிக்கிறது.

இந்தப் பின்னணியில் கல்வியாளர்களை மேம்படுத்தவும் சமீபத்திய முன்னேற்றங்களுடன் வினைத்திறனான கல்வி முறையை உருவாக்கவும் *Aspire Management and Development Consultants (Pvt) Ltd* நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இத்தொடரில் கற்பித்தலில் *Gen AI* இன் பயன்பாடு எனும் தலைப்பில் இந்நிறுவனம் நடத்திய மூன்று முன்னோடி இணையவழி பயிற்சி அமர்வுகளில் சுமார் 350க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

இந்நிறுவனத்தின் பணிப்பாளரும் முகாமைத்துவ ஆலோசகருமான இஸ்மாயில் A அஸீஸ் அவர்களால் நடத்தப்பட்ட இவ்வமர்வுகள் கல்வி நடைமுறைகளில் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துவதில் உள்ள வாய்ப்புக்களையும் உபாயங்களையும் ஆராய்ந்தன.

*Gen AI* இன் அறிமுகக் கண்ணோட்டம் முதல் *ChatGPT* போன்ற



அதிநவீன கருவிகளைப் பயன்படுத்துவதற்கான அடிப்படைக் கூறுகள் வரை பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கிய

பயிற்சி அமர்வுகள் கற்பித்தல் செயல்முறையில் உருவாக்கும் நுண்ணறிவை திறம்பட பயன்படுத்தும் நுட்பங்களை அறிமுகப்படுத்தியது. தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல ஆசிரியர்களுக்கு தனித்தனியான பயிற்சி அமர்வுகள் நடத்தப்பட்டன.

> **பயிற்சி நிகழ்ச்சிகள், மாணவர் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள், மற்றும் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்குகளையும் நடத்தி வருகின்ற அதேவேளை, இவ்வாறான நிகழ்ச்சிகள் மூலம் 200,000 இற்கு மேற்பட்ட மாணவர்கள், 1,000 இற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் மற்றும் 10,000 இற்கு மேற்பட்ட பெற்றோர்கள் பயனடைந்துள்ளனர்**

*Aspire Consultants* நிறுவனம் தனது சமூகப் பொறுப்பின் (CSR) ஒரு பகுதியாக இச் செயற்திட்டத்தை முன்னின்று நடத்துவதில் பெருமிதமடைகிறது. கொவிட் காரணமாக நாடு பூராகவும் கல்வி நடவடிக்கைகள் முடக்கப்பட்டிருந்த சவாலான காலகட்டத்தில் இந்நிறுவனம் “திறம்படக் கற்பித்தலுக்கான ஒன்லைன் கருவிகளின் பயன்பாடு” எனும் தலைப்பில் ஆசிரியர்களுக்கு இலவச பயிற்சி அமர்வுகளை அளிப்பதில் முன்னோடியாகச் செயல்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிறுவனம் ஏராளமான ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சிகள், மாணவர் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள், மற்றும் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்குகளையும் நடத்தி வருகின்ற அதேவேளை, இவ்வாறான நிகழ்ச்சிகள் மூலம் 200,000 இற்கு மேற்பட்ட மாணவர்கள், 1,000 இற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் மற்றும் 10,000 இற்கு மேற்பட்ட பெற்றோர்கள் பயனடைந்துள்ளனர்.



கோவை

இரு நாட்களில் திருமணம்:

# ஓரினச்சேர்க்கை ஆசையால் விபரீதம்



கோவை, கீரணத்தம் ஊராட்சி பகுதியைச் சேர்ந்த இளைஞன், ஐ.டி. நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறார். இவர் ஓரினச்சேர்க்கையில் விருப்பம் உள்ளவர்களிடம் ஆபாச செயலியில் தொடர்பு வைத்துள்ளார். இதனால் ஏற்பட்ட தவறான எண்ணத்தால், சமீபத்தில் அறிமுகமான இளைஞன் ஒருவருடன் தனிமையில் இருக்க விரும்பியுள்ளார்.

அங்குள்ள புதருக்குள் செல்ல இருவரும் முடிவு செய்தனர். அங்கு இருவரும் இணைந்திருக்க நினைத்த தருணத்தில், புதருக்குள் இருந்து மற்றுமோர் இளைஞன் வந்துள்ளார். அப்போதான், அழைப்புக்கு வந்த இளைஞனும், புதர்மறைவில் இருந்து வந்தவரும் கூட்டாளிகள் என்றும் பணம் பறிக்கவே வந்துள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.

இருவரும் சேர்ந்து ஐ.டி இளைஞனை தாக்கி, இருந்ததை பறித்துக்கொண்டு நிர்வாணப்படுத்தி அனுப்பிவிட்டுள்ளனர் இதுதொடர்பில், பொலிஸாரிடம் முறையிட்டதை அடுத்து விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஐ.டி ஊழியருக்கு இன்னும் ஓரிரு நாட்களில் திருமணம் நடக்க இருப்பதும் தெரியவந்தது.

குவாலியர்

மாமியார் படுகொலை:

# வீடியோவால் மருமகள்கள் சிக்கினர்

மத்தியப்பிரதேச மாநிலம் குவாலியர் பகுதியில் ஒரு ‘வாட்ஸ்அப்’ வீடியோ வைரலாக பரவியது. அதில் வயோதிப பெண்ணை 2 பெண்களும், ஆணும் சேர்ந்து கம்பால் அடிப்பது போன்ற காட்சிகள் இடம் பெற்றிருந்தன.

பொலிஸாரின் விசாரணையின் அவரை தாக்கியது அவரது மருமகள்கள் மற்றும் மூத்த மகன் என்றும் இந்த தாக்குதலுக்கு மருமகள்களின் குடும்பத்தினர் சிலரும் உடந்தையாக இருந்துள்ளனர் என்பது தெரியவந்தது. தாக்குதலுக்கு உள்ளான பெண் 2 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நிலையில் இறந்துள்ளார். தாக்கியவர்கள் தலைமறைவாகிவிட்டனர். எனினும், பொலிஸ் விசாரணைகளில் மருமகள்கள் இருவர் கைது செய்யப்பட்டனர். தப்பியோடியவர்களைத் தேடி பொலிஸார் வலை விரித்துள்ளனர்.



சேலம்

# பாம்புடன் சேஷ்டை காட்டியவர் கைது



சேலம் மாவட்டம் கோட்டக் கவுண்டம்பட்டி பகுதியில் அரசியல் கட்சியினர் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டனர். அப்போது இளைஞன் ஒருவர், தனது கழுத்தில் பாம்பை போட்டுக்கொண்டு வந்து அங்குமிங்கும் சுற்றித்திரிந்தார்.

இதுதொடர்பாக வனத்துறை நடத்திய விசாரணையில், அவ்விளைஞன் தனது வீட்டின் அருகே சாரைப்பாம்பை பிடித்துள்ளார். அந்த பாம்பை வெளியிடத்தில் கொண்டு சென்று விட திட்டமிட்டு சென்றுள்ளார். அப்போது பிரசார கூட்டத்தை பார்த்ததும், அவர்கள் முன் சாகசம் செய்வது போல் பாம்பை கழுத்தில் அணிந்துகொண்டு சுற்றி வந்துள்ளார். பிறகு அந்த பாம்பை முட்புதரில் விட்டுள்ளார் எனத்தெரியவந்தது.

இதையடுத்து அவர் மீது வன உயிரின பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து, கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

டுபாய்

# வெள்ள நீரில் மிதந்த டுபாய் விமான நிலையம்



டுபாயில் பாலைவனம் நிறைந்த பகுதிகள் அதிகளவில் உள்ளன. வெப்பநிலையும் அதிகரித்து காணப்படும் சூழலில், ஐக்கிய அரபு அமீரகம் முழுவதும் பெய்த கனமழையால் பல்வேறு இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால், வீதிகளில் நீர் தேங்கியது. பல இடங்களில் வாகன போக்குவரத்தும் முடங்கியது.

கனமழை மற்றும் வெள்ளம் எதிரொலியாக, விமான போக்குவரத்து பாதிக்கப்பட்டது. டுபாயில் சர்வதேச பயணிகள் அதிகம் வரக்கூடிய, உலகில் பரபரப்புடன் இயங்க கூடிய டுபாய் சர்வதேச விமான நிலையத்தில் வெள்ளநீர் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.


இதனை தொடர்ந்து, விமான நிலையத்திற்கு வந்த பல விமானங்கள் வேறு பகுதிகளுக்கு திருப்பி விடப்பட்டன. 100 விமானங்கள் வரை வந்து சேரக்கூடிய நிலையில், பல விமானங்களின் வருகை பாதிக்கப்பட்டது. எண்ணற்ற விமானங்கள் காலதாமதத்துடனும், ரத்து செய்யப்பட்டும் இருந்தன. இது விமான பயணிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியது.

விமான ஓடுபாதையில் வெள்ளம் புகுந்ததில், விமானங்கள் மற்றும் கார்கள், நீரில் பாதியளவு மூழ்கின. விமானங்கள் நிறுத்தும் பகுதியில் வெள்ளநீர் புகுந்தது. விமான நிலையத்திற்கு வந்து சேரும் வீதிகளும் நீரில் மூழ்கி இருந்தன.

காசா

போர் நிறுத்த ஒப்பந்தம்

# நிராகரித்தது ஹமாஸ்




காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் மீது போர் தொடுத்துள்ள இஸ்ரேல், பணயக் கைதிகளை மீட்பதற்காக தொடர்ந்து பேச்சுவார்த்தையில் பங்கேற்கிறது. அவ்வகையில், போர் நிறுத்தம் செய்து கைதிகளை பரிமாற்றம் செய்வது தொடர்பாக புதிய ஒப்பந்தம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்த ஒப்பந்தத்தை ஹமாஸ் அமைப்பு நிராகரித்துள்ளது. இது தொடர்பாக மூத்த இஸ்ரேல் அதிகாரி கூறிய தகவலை மேற்கோள் காட்டி ‘டைம்ஸ் ஆப் இஸ்ரேல்’ செய்தி வெளியிட்டுள்ளது.

இஸ்ரேல் அரசாங்கத்தால் விடுவிக்கப்பட வேண்டிய பாலஸ்தீன கைதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது உள்ளிட்ட முக்கிய அம்சங்கள் இந்த ஒப்பந்தத்தில் இடம்பெற்றிருந்தன. ஆனால், ஹமாஸ் தரப்பில் ஒப்பந்தம் ஏற்கப்படவில்லை.

ஒப்பந்தத்தின்படி முதல் கட்டமாக, பெண்கள் மற்றும் 50 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் என சுமார் 20 பணயக் கைதிகளை மட்டுமே விடுவிக்க தயாராக இருப்பதாக ஹமாஸ் தெரிவித்துள்ளது.

வொஷிங்டன்

# “நான் இருந்திருந்தால் நடந்திருக்காது”

நான் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்திருந்தால் இஸ்ரேல் மீதான் ஈரானின் தாக்குதல் நடந்திருக்காது என்று அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தனது சமூக வலைதள பக்கத்தில் பதிவிட்டுள்ள டிரம்ப், “இஸ்ரேல் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறது. இப்படி நடக்க கண்டிப்பாக அனுமதிக்கப்பட்டிருக்கக் கூடாது. நான் ஜனாதிபதியாக இருந்திருந்தால் இது நடந்திருக்காது” என்று தெரிவித்துள்ளார்.



கொழும்பு விவேகானந்தா பழைய மாணவிகளுக்கான வலைப்பந்தாட்டம்

# க்ரி.ஃ.பிண்டோரின் வசமானது கிண்ணம்




கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் பழைய மாணவிகளுக்கிடையில் வருடந்தோறும் நடைபெறும் வலைப்பந்தாட்ட கிண்ணத்தை க்ரிஃபிண்டோர் அணியினர் தம்வசப்படுத்திக் கொண்டனர்.

இரண்டு முறை சம்பியன் பட்டத்தை வென்ற தீபா சண்முகதேவா தலைமையிலான ஐஸ் ஸ்ரோம் அணியினருக்கும், இம்முறை முதற்தடவையாக களமிறங்கிய அர்ஷிகா சத்தியசீலன் தலைமையிலான க்ரிஃபிண்டோர் அணியினருக்கும் இடையில் இறுதிப் போட்டி கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முன்னாள் சம்பியனான ஐஸ் ஸ்ரோம் அணியில் அனுபவம் கொண்ட சிரேஷ்ட வீராங்கனைகள் பலர் இடம்பெற்றிருந்தபோதிலும், இளமையும், வேகமும் கொண்ட க்ரிஃபிண்டோர் அணியினர் தமது ஆதிக்கத்தை வெளிப்படுத்தி போட்டியை ஆரம்பம் முதலே தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

வேகத்தை மட்டுமன்றி, விவேகத்தையும் வெளிப்படுத்திய இளம் வீராங்கனைகளை கொண்ட க்ரிஃபிண்டோர் அணியினர் முதல் பாதியில் 10 கோல்களை பெற்று முன்னிலை பெற்றதுடன், இரண்டாவது பாதியில் மேலும் 11 கோல்கள் அடங்கலாக 21 கோல்களை போட்டனர். ஐஸ் ஸ்ரோம் அணியினர் மொத்தமாக 5 கோல்களையே போட்டனர்.

இவ் இரண்டு அணிகளிலும் இடம்பெற்ற வீராங்கனைகள் பலர் கல்லூரி காலத்தில் வலைப்பந்தாட்ட அணியை பிரதிநிதித்துவப்படுத்தி இருந்ததுடன், கல்லூரியை வலயமட்ட போட்டிகளுக்கு கொண்டு சென்று வெற்றியீட்டிய பெருமையையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு விவேகானந்தா பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இப்போட்டிகளில் மொத்தமாக ஐந்து அணிகள் கலந்து கொண்டன. மூன்றாம் இடத்திற்கான போட்டியில் டொமினன்ட் டிவாஸ் அணியை வீழ்த்தி அக்கினி சிறகுகள் வெற்றி பெற்றது.




# சப்ரகமுவ லயன்ஸ் கழகம் வெற்றி

சிவா ஸ்ரீதரராவ்





காவத்தை ஸ்ரீ ஜெய் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் முதலாவது தடவையாக நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியும் சமூக சேவையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வும் காவத்தை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதற்கு காவத்தை பிரபல யூத் விளையாட்டு கழகம் தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்கி இருந்தது.

எட்டு பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் 40 அணிகள் பங்குபற்றின. முதலாவது இடத்தை சப்ரகமுவ லயன்ஸ் கழகமும், இறக்குவானை ஜே.ஆர். விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும் வெற்றி கொண்டன.

இந்நிகழ்வில் சர்வமத குருமார்கள் மற்றும் காவத்தை ஸ்ரீ ஜெய் நற்பணி மன்றத்தின் தலைவர் எஸ்.சுரேஷ், செயலாளர் எம்.சுதர்ஷின், பொருளாளர் மகாராஜா, மன்றத்தின் ஆலோசகர்களான பாலசுப்பிரமணியம், எம்.ரவிந்திரன், நந்தகுமார், காவத்தை பிரபல யூத் விளையாட்டு கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களான முரளி, ரவி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.





மெதகெகில பிறிமியர் லீக்

# சுப்பர் ஸ்டார் வசமானது

தெல்தோட்டை, மெதகெகில ஸேரன்ஜர்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் நோன்பு பெருநாளை முன்னிட்டு, ஐந்தாவது தடவையாகவும் ஏற்பாடு செய்திருந்த மாபெரும் மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரில் எம்.சமீர் தலைமையிலான சுப்பர் ஸ்டார் அணி சாம்பியனாக தெரிவானது.

மெதகெகில ஸேரன்ஜர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஏப்ரல் மாதம் 13, 14ஆம் திகதிகளில் இடம்பெற்ற இந்த போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் ஏ.எம்.அஸ்கர் தலைமையிலான றோயல் செலர்ஜர்ஸ் அணியினை வெற்றிக் கொண்டே சுப்பர் ஸ்டார் அணி இந்த வெற்றியினை பதிவு செய்தது.

இறுதிப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக சுப்பர் ஸ்டார் அணியின் அதிரடி ஆரம்ப துடுப்பாட்ட வீரர் நிப்லான் தெரிவானார். தொடரின் வளர்ந்து வரும் சிறந்த வீரராக சுப்பர் ஸ்டார் அணியின் இளம் வீரர் எம்.ரைஸான் தெரிவானார். போட்டித் தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக புலட் பிரதர்ஸ் அணியின் இடது கை ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ரஸீக் தெரிவான அதேவேளை சிறந்த பந்து வீச்சாளராகவும், 40 வயதுக்கு மேற்பட்ட சிறந்த வீரராகவும் றோயல் செலர்ஜர்ஸ் அணியின் எம்.சியாம் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.















விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 18 ஏப்ரல் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.